**செய்தி வெளியீடு எண்: 336** **நாள்: 13.06.2019**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (13.6.2019) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 12 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம் – தூத்துக்குடி மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், சிவகங்கை மாவட்டம் – காளையார்கோயில் மற்றும் சிங்கம்புணரி, கிருஷ்ணகிரி மாவட்டம் – சூளகிரி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை, எழிலகத்தில் 15 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பேரிடர் மேலாண்மை அலுவலகம், பயிற்சி நிலையம் மற்றும் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மக்களை தேடி அரசு எனும் சீரிய கோட்பாட்டின்படி, அரசின் மக்கள் நலத்திட்டங்களை ஏழை எளிய மக்களிடையே முறையாக கொண்டு சென்று, அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மேம்பாட்டிற்காக புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தூத்துக்குடி மாவட்டம் – தூத்துக்குடி மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களில் 4 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், சிவகங்கை மாவட்டம் – காளையார்கோயில் மற்றும் சிங்கம்புணரி, கிருஷ்ணகிரி மாவட்டம் – சூளகிரி ஆகிய இடங்களில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் சென்னை – எழிலகத்தில்,
15 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பேரிடர் மேலாண்மை அலுவலகம், பயிற்சி நிலையம் மற்றும் மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம் 150 ஆண்டுகளை கடந்த தமிழ்நாடு அரசின் மிகவும் பழமையான துறைகளில் ஒன்றாகும். இத்துறையானது, நிலஅளவைப் பிரிவுகள், நிலஅளவை குறியீடு, நிலஆவணங்கள் பராமரித்தல், நிலஉரிமை மற்றும் பின்னர் அதில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகத்தின் பணிகள் தொய்வின்றி சீரிய முறையில் தொடர்ந்திட இத்துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் நிரப்பி வருகிறது. அந்த வகையில், தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் காலியாகவுள்ள 101 நிலஅளவர் மற்றும் 157 வரைவாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 14 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் டாக்டர் இரா.செல்வராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 13.6.2019**